செ.வெ.எண்:890/2017 நாள்:20.11.2017

# அனுமதி பெற்ற பின்பே பட்டா நிலங்களில் இருந்து மட்டும் செங்கல் சூளைமண் வெட்டி எடுக்க வேண்டும்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

சேலம் மாவட்டத்தில் அனுமதி பெற்ற பின்பே பட்டா நிலங்களில் இருந்து மட்டும் செங்கல் சூளைமண்ணை வெட்டி எடுக்க வேண்டும். இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

சேலம் மாவட்டத்தில் இயங்கும் சேம்பர் மற்றும் நாட்டு செங்கல் சூளை உரிமையாளர்கள் செங்கல் தயாரிக்க செங்கல் சூளை மண் (Brick Earth) வெட்டி எடுப்பது தொடர்பாக வருடாந்திர செங்கல் மண் கட்டணம், விண்ணப்பம் கட்டணம் மற்றும் செங்கல் சூளை பதிவு சான்று கட்டணம் ஆகியவற்றை செலுத்தி விண்ணப்பம் செய்து செங்கல் சூளைமண் வெட்டி எடுக்க அனுமதி வழங்க ஏதுவாக தெரிவிக்கப்படும் புலம் தொடர்பாக மாவட்ட சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதி மற்றும் முறையான ஒப்புதல் பெற்ற பின்பே பட்டா நிலங்களில் இருந்து மட்டும் செங்கல் சூளைமண் வெட்டி எடுக்க வேண்டும்.

செங்கல் சூளையில் பணிபுரிய வரும் பணியாளர்களை கொத்தடிமைகளாக நடத்துதல் கூடாது. செங்கல் சூளையில் பதினான்கு வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியரை பணியமர்த்துதல் கூடாது. செங்கல் உற்பத்தி செய்பவர்கள் முறையாக அரசு அனுமதி பெறுவதற்குண்டான வழிமுறைகளை தெரிந்துகொள்ள சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை துணை இயக்குநர் அலுவலகத்தை அணுகுமாறு தெரிவிக்கப்டுகிறது. உரிய அரசு அனுமதியின்றி செங்கல் சூளைமண் வெட்டி எடுக்கும் செங்கல் சூளை உரிமையாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கஅறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம்.